Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.125/2016

Dated 25-03-2026
Deposition of witness for : PW 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மதியழகன் | வயது | : | 64 |
| தந்தை பெயர் | : | ராமையன் | தாலுக்கா | : | பாபநாசம் |
| கிராமம் | : | மெலட்டூர் | தொழில் | : | விவசாயம் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 3,4,5 present/A2,6,8 absent 355 BNSS Petition filed and allowed.**

**Counsel Present**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC No. 74663/2024 /F1/dt.21.2.2025 the Identity of the witness verified with their Identity card.**

**Aathar card of the Witness verified.**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்தோடு வசித்து வருகிறேன். விவசாயம்

செய்து வருகிறேன்.

2) 25.5.2014 ம் தேதி மாலை 5.15 மணியளவில் எனது வீட்டில் இருந்து சின்னகடைதெருவில் உள்ள அழகர் டீ கடைக்கு டீ குடிக்க சென்றேன்.அப்போது மாங்குடியை சேர்ந்த 6 நபர்கள் பெயர் ஞாபகம் இல்லை. அழகர், முருகேசன், கூத்தரசன், ஆறுமுகம் ஆகியோர்களை கட்டையாலும் அருவாளாளும் வெட்டினார்கள். வெட்டி விட்டு இரண்டு சக்கரவாகனத்தில் அகரமாங்குடி பக்கம் போனார்கள்..

3)அடிப்பட்டு கிடந்தவர்களை ஜெகதீசன் என்பவர் மெலட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுஅங்கு முதல் உதவி சிகிச்சை அளித்து மேற் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள்.

4) பிறகு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ஆறுமுகம் என்பவர் சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னதாக கேள்விப்பட்டேன்.

5) 28.5.2014 அன்று என்னை போலிசார் விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வெட்டிய நபர்கள் வயது, அவர்களது அங்க அடையாளம் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் சம்பந்தமாக போலிசார் அடையாளம் காட்டி அடையாள அணிவகுப்பு எதுவும் செய்யவில்லை. அ.சா.1,2 என் நண்பர்கள் என்றால் என் தெருவாசிகள், அவர்கள் எனக்கு பழக்கம் வழக்கம்தான்.

சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் தற்போது பொய்யாக சாட்சியம்

**அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை**

**இல்லை.**

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.25 15:35:18 +0530